**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08012023-6376

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 03.04.2023

Accepted: 14.06.2023

Published: 01.07.2023

Citation:
Iyyappan, K. "One Sided Love in Tamil Literature." *Shanlax International Journal of Tamil Research,* vol. 8, no. 1, 2023, pp. 71–84.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6376

*Corresponding Author:
agniiyyappan@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# One Sided Love in Tamil Literature

**K. Iyyappan**
*Department of Tamil, L.N. Government College*
*Ponneri, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0002-1789-961X*

**Abstract**
Kaikilai is the lust that appears only in one of the two, male and female. In short, a kaikilai is a one-sided love affair. Kai means smallness. kilai means relationship. A petty relationship or a prideless relationship means a branch. The content explains that the branch is monogamous. During Tolkappiyar period, it was called kaikilai to make love to a woman who had not reached sexual maturity. A branch was also said to be masculine. A woman is not told to fall in love with a man who has not reached puberty. However, the unilateral preference of the male and female who has reached puberty is ignored. This is evidenced by the fact that the Kaikilai song sung by Nakkannaiyar about Amurmallan is compiled in Purananooru (83, 84, and 85). Masculine hymns kalithogai in the hymns (56, 57, 58, and 109). It is worth noting that all the songs in the muthollayiram are kaikilai songs about one-sided love. A branch is also a member of the Kalambaka. Reliability takes branches both internally and externally. It calls the initial stage of love the inner branch. Showing love to an immature woman is called introversion. The puraporul Venba Malai depicts the one-sided love between a pubescent man and woman. Often talking about veils, the Puraporul venpamalai also excludes one-sided love as subliminal.

**Key Words:** Kaikilai, One Sided Love, Tholkappiyam, Kalithogai, Mutholayiram, Nambiakapporul, Akakaikilai, Akappurakaikilai.

**References**

1. Devira (Text). 2020. *Puraporul Venpamalai*. Chennai, Srinandini Publication.
2. Gopaliyar, T. V. (Editor), 1974. *Ilakkana Vilakkam*, Thanjavur, Saraswati Mahal Publication.
3. Govindarasa Mudaliar, Ka. R. (Lecture), 1978. *Panniru Pattiyal*, Chennai, Kazhagam Publication.
4. Kannan, R. (Eds.), 2003. *Maranakaporul*. Chennai, Koothan Publication.
5. Kannan, R. (Text), 2005. *Venpapatial*. Chennai, Apper Publication.
6. Manikanar, Va. Suba. 2009. *Tamizhkadal*, Chennai, Sri Hindu Publications.
7. Manivel, Dr. M. 2009, *Thamizh Ilakkiya Agapporul Marapugal*, Madurai, Chellappa Publication.
8. Muthukumaraswamy Thambiran. 1992, *Thirunavukarasu Swamigal Devaram*. Thirupanandal, Srikasimadam.
9. Muthuveera Upadhyaya. 1889. *Muthuveeriyam*, Chennai, Printed at the Albion Press.
10. Narayanasamy Iyer, A. (Text), 1962. *Nattrinai*, Chennai, Kazhagam Publication.
11. Perumalsamy, S. (Editor), 1947. *Kachikalambagam*, Thanjavur, Thanjavur Co-operative Publication.
12. Puliyur Kesigan. (Text), 2011. *Thirukkutralakkuravanchi*, Chennai, Paari Nilaiyam.
13. Puliyur Kesikan. (Text), 2009. *Tolkappiyam*, Chennai, Paari Nilaiyam.
14. Sandhya Natarajan. (Editor), 2004. *Madurai Tamil Perekaradhi - Part One*, Chennai, Sandhya Publication.
15. Sarala Rajagopalan. 1998. Sanga Ilakkiyam(Agam), Chennai.
16. Sethu Raghunathan, N. (Text), 1981. *Muthollaiyaram*, Chennai, Kazhagam Publication.
17. Shanmukampillai, M. (Editor), 2010, *Tholkappiyam Porulathikaram Ilampuranam-Part-1*, Chennai, Mullai Nilaiyam.
18. Subramanian, S. V. (Text), 2010. *Sanga Ilakkiyam-Ettuthogai*, Chennai, Manivaskar Publication.
19. Varadarasanar, M. (Thelivurai), 2014. *Thirukkural*, Chennai, Kazhagam Publication.

# தமிழ் இலக்கியத்தில் கைக்கிளை

***முனைவர் கி. அய்யப்பன்***
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
உ. நா. அரசினர் கல்லூரி, பொன்னேரி

***ஆய்வுச்சுருக்கம்***

*தலைவன் தலைவி ஆகிய இருவருள் ஒருவரிடத்தில் மட்டும் தோன்றும் காமத்தையே கைக்கிளை என்பர். சுருக்கமாகச் சொன்னால் கைக்கிளை என்பது ஒருதலைக் காதல் ஆகும். கை என்பது சிறுமை எனப் பொருள்படும். கிளை என்பது உறவு எனப் பொருள்படும். சிறுமையான உறவு அல்லது பெருமையில்லா உறவு என்பது கைக்கிளையின் பொருள். கைக்கிளை ஒருதலைக்காமம் என்று நம்பி அகப்பொருள் விளக்குகிறது. தொல்காப்பியர் காலத்தில் காமப் பருவம் அடையாத பெண்ணைப் பருவம் அடைந்தவளாகக் கருதிக் காதல் கொள்வது கைக்கிளை எனப்பட்டது. கைக்கிளை என்பது ஆண்மகனுக்குரியது என்றும் கூறப்பட்டது. காமப்பருவம் எய்தாத ஆணிடம் பெண் காதல் கொள்வது கூறப்படவில்லை. ஆனாலும் பருவம் அடைந்த ஆணைப் பெண் ஒருதலையாக விரும்புதல் புறமாகக் கொள்ளப்பட்டது. நக்கண்ணையார், ஆமூர்மல்லனைப் பற்றிப் பாடிய கைக்கிளைப் பாடல் புறநானூற்றில் (83, 84, 85) தொகுக்கப்பட்டுள்ளது என்பது இதற்குச் சான்று எனலாம். ஆண்பால் கைக்கிளைப் பாடல்கள் கலித்தொகையில் (56, 57, 58, 109) இடம்பெறுகின்றன. முத்தொள்ளாயிரத்தில் அகப்பாடல்கள் எல்லாமே ஒருதலைக் காதலைக் கூறும் கைக்கிளைப் பாடல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கலம்பகத்தின் உறுப்பாகவும் கைக்கிளை உள்ளது. நம்பியகப்பொருள் அகத்திணையாகவும் அகப்புறத்திணையாகவும் கைக்கிளையைக் கொள்கிறது. காதலின் தொடக்க நிலையை அது அகக் கைக்கிளை என்கிறது. காமப்பருவம் அடையாத பெண்ணிடம் காதலைப் புலப்படுத்துதலை அகப்புறக்கைக்கிளை என்கிறது. புறப்பொருள் வெண்பா மாலை பருவமடைந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் ஒருதலைக் காதலைக் கைக்கிளைத் திணையாகக் கொள்கிறது. பெரும்பாலும் போர்த்திணைகள் பற்றிப் பேசும் புறப்பொருள் வெண்பா மாலை ஒருதலைக் காதலையும் அகச்சிறப்பற்றதாகக் கருதிப் புறத்தில் சேர்த்திருக்கிறது. இதில் காணும் துறைக்கொளுக்களும் வெண்பாக்களும் காதலைச் சுவைபடக் கூறுகின்றன.*

***குறிச்சொற்கள்:*** *கைக்கிளை, ஒருதலைக் காதல், தொல்காப்பியம், கலித்தொகை, முத்தொள்ளாயிரம், நம்பியகப்பொருள், அகக்கைக்கிளை, அகப்புறக்கைக்கிளை*

**முன்னுரை**

தனித்துவமான பண்பாடு, நிறுவனம் சார்ந்த தொடர்புகள், ஒரே மாதிரியான நிலப்பகுதியில் வாழ்தல், ஒரே மொழியினைப் பேசுதல் போன்ற ஒற்றுமைகளைக் கொண்ட மக்கள் குழுவினைச் சமூகம் எனலாம். சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவைக் குறிக்கும், ஒரேமாதிரியான புவியியல் நிலப்பகுதியில் வாழ்கின்ற ஒரு பெரிய மக்கள் குழுவையும் சமூகம் எனலாம். அல்லது ஒரே மாதிரியான அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்ட சமூகப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் குழுவையும் சமூகம் எனலாம். இவ்வாறு வாழுகின்ற தமிழ்ச் சமூகத்தில், பண்டைய காலந்தொட்டே மக்களிடையே இருந்து வருகின்ற ஒருமரபு கைக்கிளை என்னும் ஒருதலைக் காமம். இது தொல்காப்பியர் காலத்தில் அகத்திணையாகக் கொள்ளப்பட்ட கைக்கிளைத்திணை, புறப்பொருள் வெண்பா மாலையில் புறத்திணையாக ஆக்கப்பட்டது. இது புறப்பொருள் வெண்பா மாலையில் 11 ஆவது திணை. இதில் 19 துறைகள் உள்ளன.

இது ஆண்பால் கைக்கிளை, பெண்பால் கைக்கிளை என இரு பகுதிகளாக விளக்கப்பட்டுள்ளது. கைக்கிளை என்ற தொடருக்குச் சிறிய உறவு என்பது பொருள்; சிறிது காலமே நிற்கும் உறவு இது எனலாம். கை என்பதற்குத் தனிமை என்றும் பொருள் உண்டு. கைம்பெண் என்பதில் இப்பொருளைக் காணலாம். எனவே கைக்கிளை என்பது தனித்த உறவு என்றும் பொருள்படும். இத்தகைய கைக்கிளை ஒழுக்கம் தமிழ்ச் சமூகத்தில் எவ்வாறு இருந்துவந்துள்ளது என்பதை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

**கைக்கிளை- விளக்கம்**

தலைவன் தலைவி ஆகிய இருவருள் ஒருவரிடத்தில் மட்டும் தோன்றும் காமத்தையே கைக்கிளை என்பர். சுருக்கமாகச் சொன்னால் கைக்கிளை என்பது ஒருதலைக் காதல் ஆகும். கை என்பது சிறுமை எனப் பொருள்படும். கிளை என்பது உறவு எனப் பொருள்படும். சிறுமையான உறவு அல்லது பெருமையில்லா உறவு என்பது கைக்கிளையின் பொருள். ஆயினும் இது பற்றிய இலக்கணத் தெளிவைப் பின்னர்க் காணும்போது இது அவ்வளவு இழிவானதன்று என்பதைத் தெரிந்து கொள்ளமுடிகிறது. ஏழிசைனொன்று அது அண்ணத்தாற் பிறக்குமிசை, ஒருதலைக்காமம், ஒரு பிரபந்தம், அது ஒருதலைக் காமத்தினை ஐந்து விருத்ததாற் கூறுவது, வெண்பா முப்பத்திரண்டாற் கூறலுமாம். யாழினரம்பு (ப.723) என்று தமிழ்ப் பேரகராதி விளக்கம் கூறும். மேலும் தமிழர் திருமணம் நூலிலிருந்து கைக்கிளையாவது ஆடவன் பெண்டு ஆகிய இருவருள்ளும் ஒருவருக்கே காதல் இருப்பது. இது ஒருதலைக் காமம். கை என்பது பக்கம். கிளை என்பது நேயம். ஆகவே கைக்கிளை என்பது ஒருதலைக் காதல் என ஓர் விளக்கத்தினை எடுத்துக்காட்டாய்க் காட்டும். கைக்கிளை என்பது அகத்திணையின் உட்பிரிவாகும். இஃது அன்பின் ஐந்திணையுடன் வைத்து எண்ணப்படுவது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் கைக்கிளைக்கு உரிய காதற் செய்கைகளையே கூறியுள்ளார். தொல்காப்பியர் அகத்திணையியல் 53வது நூற்பாவில் கைக்கிளையையும், 54வது நூற்பாவில் பெருந்திணையையும் கூறியுள்ளார். கைக்கிளை பெருந்திணைகட்கு இலக்கணம் கூறினாற்போலத் தோன்றும். ஆண்டுக் கூறியிருப்பவை இலக்கணம் அல்ல, அவ்விரு திணை பற்றிய காதற் செய்கைகள் (ப.164) என்றுஅறிஞர்வ.சுப.மாணிக்கனார் குறிப்பிடுவர். தொல்காப்பியத்திற்குப் பின்னெழுந்த இலக்கண நூல்கள் அகத்திணைகட்கு இலக்கண வரையறவு தருகின்றன. அகப்பொருள் விளக்க ஆசிரியர் நாற்கவிராசநம்பி, கைக்கிளையுடையது ஒருதலைக் காமம் என்று கூறுவர். ஒருதலை என்று அடைகொடுத்து கைக்கிளையின் காமத்தன்மையை மொழிகின்றார். இதனை உணர்ந்தவர்கள் இக்கைக்கிளை அன்பற்றது என்று கொள்வர்.

**கைக்கிளையின் இலக்கணம்**

கைக்கிளையைத் தொல்காப்பியர், கீழ்க்காணுமாறு விளக்குகிறார்.

> **"காமம் சாலா இளமை யோள்வயின்**
> **ஏமம் சாலா இடும்பை எய்தி**
> **நன்மையும் தீமையும் என்று இரு திறத்தான்**
> **தன்னொடும் அவெளாடும் தருக்கிய புணர்த்துச்**
> **சொல் எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**
> **புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"**
> **(தொல்- பொருள், அகத்திணையியல்: 53)**

எனும் நூற்பாவில், காமத்திற்குப் பொருத்தம் இல்லாத இளையவளிடத்தில் பாதுகாவல் அற்ற அதாவது காதல்நோய் தீர்வதற்கு வழியில்லாத காதல் துன்பம் கொள்கிறான் தலைவன். புகழ்தல், பழித்தல் என்ற இரு வகையாலும் அவளைப் பற்றிப் பேசுவான்; தனக்கும் அவளுக்கும் ஒத்த குணங்களைச் சேர்த்துச் சொல்வான். அவளோ பிறரோ கேட்காதபடி அவன் பேசுவதால் அவன் சொல்லிற்கு மறுமொழி இராது; தானே

சொல்லி இன்புறுவான். இவ்வாறு அமையும் ஒருதலைக் காதல்தான் கைக்கிளை எனப்படும். கைக்கிளைக் காமம் என்பது இறுதி வரை ஒருதலைக் காதலாகவே இருந்து விடுவதன்று. தலைவனுடைய வேட்கையைத் தலைவி பின்னர்ப் புரிந்துகொண்டு உடன்படும் போது அது நல்ல காதலாக மலரும்.

ஆகவே கைக்கிளையைக் காதலின் தொடக்கம் எனவும் கொள்வார்கள். அன்பின் ஐந்திணைக் களவுக் காதலுக்கு முன்பு கைக்கிளை நிகழ்வது இயல்பு என நம்பியகப்பொருள் (நூ.28) கூறுகிறது. இவ்வாறு அன்றிக் காதலாக மலராமல் இறுதிவரை கைக்கிளையாகவே நின்று விடுவதுதான் இழிவான கைக்கிளை எனலாம். தலைவன் ஒருவன் கைக்கிளைக் காதல் கொள்வது ஆண்பாற் கைக்கிளை எனப்படும். அது போலவே தலைவி ஒருத்தி கைக்கிளைக் காதல் கொள்வது பெண்பாற் கைக்கிளை எனப்படும். ஆனால் அது இலக்கணமாகச் சொல்லப்படவில்லை. பின்னர் நீங்கள் காணவிருக்கும் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றில் பெண்பாற் கைக்கிளை அமைந்துள்ளது. அதனால் அவற்றை அகத்திணையில் சேர்க்காமல் புறத்திணையில் சேர்த்துள்ளனர்.

**கைக்கிளையின் சிறுமையும் பெருமையும்**

கைக்கிளை என்னும் வகைமை சிறுமையுடைத்து. கைக்கிளையும் பெருந்திணையும் அகத்திணைகளல்ல என்னும் கருத்து பிற்கால இலக்கணத்தார்க்குத் தோன்றியது. ஆகையினால் கைக்கிளையும் பெருந்திணையும் அகத்திணையன்று அகப்புறம் என்று தனிவகை செய்யத் துணிந்தனர்.

மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் இதனைத் திறம்பட மறுத்து கைக்கிளையும் பெருந்திணையும் அகத்திணைகளே எனத் தொல்காப்பியரின் கருத்தை நிறுவுவார்.

**“கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை யென்ப”**
**(தொல்.அகத், நூ. 1)**

என்னும் தொல்காப்பிய நூற்பாவினை எடுத்துக்காட்டும் அவர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்தையும் இணைத்துச் சொல்ல ஐந்திணை என்னும் சொல்லையும் அவற்றொடு கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றையும் இணைத்துச்சொல்ல அகத்திணை என்னும் சொல்லையும் தொல்காப்பியர் தனித்தனியே பயன்படுத்துதலையும் எடுத்துரைக்கிறார்.

புறத்திணை மருங்கிற் பொருந்தினல்லது
**அகத்திணை மருங்கின் அளவுத லிலவே**
**(தொல்.அகத்.நூ.58)**
**அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர்**
**புறத்திணை யிலக்கணம் திறப்படக் கிளப்பின்**
**(தொல். புறத், நூ.1)**

என வரும் இடங்களை எடுத்துக்காட்டுகிறார். அகத்திணையுள் ஐந்திணை பாடல் சான்ற புகழ்த்திணை, பல்துறையுடைய திணை. ஆதலின் ஐந்திணைக்குச் சிறந்த தனித்தன்மையுண்டு; மிக்க பொதுத் தன்மையுண்டு. ஐந்திணை போலக் கைக்கிளை பெருந்திணைகள் சிறப்பில்லை, பாடல் பெறவில்லை என்றாலும், அவையும் அகத்திணையின் உட்பிரிவுகள் அல்லவா? அகத்திணைக்கு ஒரு நற்பண்பு உண்டெனின், அப்பொதுப்பண்புஅவ்விருஉட்பிரிவுகளுக்கும் இருக்கத்தானே வேண்டும்? ஐந்திணை நல்ல திணையாயின்” அதனொடு வைத்து எண்ணப்படும் கைக்கிளை பெருந்திணைகளும் நல்லனவாகத்தானே இருத்தல் வேண்டும்? இம்முறையான் ஆராயின், இவ்விருதிணைகளின் தூய்மையும் மேன்மையும் வெளிப்படும், என்று கூறும் அவர் கைக்கிளையும் பெருந்திணையும் இழிந்தவையோ ஒதுக்கப்படவேண்டியவையோ அன்று என விளக்க உணவின் வகைகள் சோறும் கறியும் துவையலுமெல்லாம். சோறு உணவினுட் சிறந்ததுதான் என்பதற்காகச் சோறே

உணவாகி விடுமா? ஏனைக்கறியும் துவையலும் நஞ்சாகிப் போமா? என்னும் வினாவினை எழுப்புகிறார்.

### புறப்பொருள் வெண்பாமாலை

புறப்பொருள் வெண்பாமாலை கைக்கிளையை, ஆண்பால் கூற்றுக் கைக்கிளை, பெண்பால் கூற்றுக் கைக்கிளை என இரண்டாகப் பிரித்து விளக்குகிறது.

### ஆண்பால் கூற்றுக் கைக்கிளை

புறப்பொருள் வெண்பாமாலையில் கொளு மற்றும் 284 முதல் 292 வரையுள்ள நூற்பாக்கள், காட்சி, ஐயம், துணிவு, உட்கோள், பயந்தோர்ப் பழிச்சல், நலம் பாராட்டல், நயப்புற்றிரங்கல், புணரா விரக்கம், வெளிப்பட இரத்தல் (ப. 262) என இவ்வொன்பது துறைகளும் ஆண்பால் கூற்றுக் கைக்கிளை யாகும் என கூறுகிறது.

### பெண்பால் கூற்றுக் கைக்கிளை

புறப்பொருள் வெண்பாமாலையில் கொளு மற்றும் 293 முதல் 304 வரையுள்ள நூற்பாக்கள், காண்டல், நயத்தல், உட்கோள், மெலிதல், மெலிவொடு வைகல், காண்டல் வலித்தல், பகல் முனிவு உரைத்தல், இரவுநீடு பருவரல், கனவில் அரற்றல், நெஞ்சொடு மெலிதல் (ப. 269) என இவ் பத்து துறைகளும் பெண்பால் கூற்றுக் கைக்கிளை யாகும் என கூறுகிறது.

தொல்காப்பியருக்குப் பின்பு பல்வேறு அகப்பொருள் நூல்கள் தோற்றம் பெற்றன. அவற்றில் தொல்காப்பியர் வகுத்த திணை அமைப்பினைப் பார்க்கையில் இறையனார் அகப்பொருள், வீரசோழியம் போன்றவை அன்பின் ஐந்திணையை மட்டும் கூறி கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கத்திணைக் கூறவில்லை. நம்பியகப் பொருளில் (ப.118) விளக்கப்பட்டதைப் போன்று மாறனகப்பொருள் (ப.29), இலக்கண விளக்கம் போன்றவைகளில் அன்பின் ஐந்திணைகளோடு கைக்கிளை, பெருந்திணை சேர்த்து அகத்திணை ஏழு என்று சுட்டியுள்ளன.

ஆனால், தமிழ்நெறி விளக்கம் ஐந்திணை பற்றி முடிவு செய்ய முடியவில்லை என்கிறது. காரணம், அகப்புறப் பாகுபாட்டினுள் கைக்கிளை, பெருந்திணைப் பற்றி அகப்பொருள் தொடர்பான செய்திகள் இருக்க வாய்ப்பில்லை என்கிறது.

### கைக்கிளை தனிவகைச் சிற்றிலக்கியம்

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாக கைக்கிளை குறிப்பிடப்படுகிறது. ஒருதலைக்காமத்தை இருபத்தைந்து விருத்தப்பாக்களால் பாடுவது கைக்கிளை எனப்படும் என வெண்பாப்பாட்டியல் உரைக்கிறது.

**. . .ஏய்ந்த**
**ஒருதலைக் காம முரைப்பவையை யைந்தாய்**
**வரு விருத்தங் கைக்கிளையா மன்**
**(வெண். பாட். செய். 38)**

ஆனால் இலக்கணவிளக்கப்பாட்டியலும் முத்துவீரியமும் ஒருதலைக்காமத்தை ஐந்து விருத்தங்களாலே பாடுவது கைக்கிளை என உரைக்கின்றன.

**“ஒருதலைக் காம மோ ரைந்து விருத்தங்**
**கருத வுரைத்தல் கைக்கிளை யாகும்.”**
**(இல.விள.பாட். 67)**

**“ஐந்து விருத்தத் தாலே யொருதலைக்**
**காமத் தைக்கூ றுவது கைக்கிளை”**
**(முத். வீரி. 148)**

மேலும், பன்னிருபாட்டியலானது கைக்கிளை மாலையைப் பற்றி,

**“இரங்க வருவது மயங்கிய ஒருதலை**
**இயைந்த நெறியது கைக்கிளை மாலை”**
**(பன். பாட். 184)**

என்று கூறுகிறது.

**கைக்கிளை பாடல்களும் இலக்கியங்களும்**

ஒருதலைக் காதலான கைக்கிளைப் பாடல்கள் சங்க அக இலக்கியங்களில் மிக மிகக் குறைவு. குறுந்தொகையில் ஒன்று (பா.78) நற்றிணையில் இரண்டு (பா. 39, 94), கலித்தொகையில் நான்கு (பா.56, 57, 58, 109) ஆகியன கைக்கிளைக்கு உரியனவாக உள்ளன. பரிபாடலின் பதினோராவது பாடலில் கைக்கிளையைக் காண முடிகிறது. புற இலக்கியமான புறநானூற்றில் மூன்று (பா.83, 84, 85) பாடல்கள் கைக்கிளைத் திணையைச் சார்கின்றன.

திருக்குறளில் தகையணங்குறுத்தல், குறிப்பறிதல் ஆகிய அதிகாரங்களில் கைக்கிளையைக் காண முடிகின்றது. முத்தொள்ளாயிரப் பாடல்கள் பலவற்றில் சேர, சோழ, பாண்டிய நாட்டு மகளிர் பலர் அவர்தம் மன்னர் மீது கொள்ளும் ஒருதலைக் காதலைக் காணலாம். நாயக-நாயகி பாவத்தில் அமைந்த நாயன்மார், ஆழ்வார் பாடல்களில் அடியார்கள் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியராகவும் கொண்டு அவன் அன்பைப் பெறத் துடிக்கும் ஒருதலைக் காதலைக் காட்டுகின்றனர். கோவை, உலா, கலம்பகம், தூது, குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்களிலும் கைக்கிளைக் காதல் காட்டப்படுகின்றது.

**இளம்பூரணர் காட்டும் சான்று**

கைக்கிளையை விளக்கும் காமம் சாலா இளமையோள் வயின்(அகத். நூ.53) என்று தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவிற்கு, காமம் சாலா இளமையோள்வயின் கூறியற்குச் செய்யுள் (ப.76) என்று கபிலரது தலைவன் கூற்றாக வரும் குறிஞ்சிக்கலிப் பாடல் ஒன்றை (பா. 56) உரையாசிரியர் இளம்பூரணர் சான்று காட்டுகின்றார்.

**“ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்”**
**(கலி, 56)**

எனத் தொடங்கும் பாடல் அது. காமத்திற்கு அமையாத அழகிய இளம்பெண் ஒருத்தியைக் காண்கிறான் தலைவன். ‘நிலாப் போன்ற முகத்துடன் இங்கே வரும் இவள் யார்? கொல்லிமலையில் வல்லவனால் செய்யப்பட்ட பாவையோ? எல்லா அழகிய பெண்களின் உறுப்புகளையும் ஒருங்கிணைத்துப் பிரமன் செய்த பேரழகியோ? ஆயரைக் கொல்ல அழகிய வடிவாக வந்த கூற்றுவனோ?” எனப் பலவாறு ஐயம் கொள்கிறான்.

கைக்கிளைக் காதலின் தொடக்க நிலையாகிய ‘காட்சி”, ‘ஐயம்” ஆகியவை இப்பகுதியில் அமைந்திருப்பதைக் காண்கிறோம். பின்னர்த் தலைவன், தலைவியின் அணி, ஆடை ஆகியவைகளைக் கொண்டு அவள் ஒரு மானிடப் பெண்ணே என ஐயம் தீர்கிறான். இது கைக்கிளையின் மூன்றாம் நிலையாகிய ‘தெளிவு” என்பதைக் குறிக்கும். இத்தெளிவு தோன்றிய பின் தலைவனது கைக்கிளைக் காதல் மேலும் பெருகுகிறது. மருந்தில்லாத நோய்க்கு ஆளாகிறான். அவளோடு ‘பேசிப் பார்ப்போம்” எனத் தனக்குள்ளேயே பேசுகிறான். இப்பேச்சில் அவள் அழகைப் புகழ்தலும், அவ்வழகு அவனைத் துன்புறுத்துவதால் இகழ்தலும் அமைகின்றன.

**“பெருத்தநின் இள முலை**
**மயிர்வார்ந்த வரி முன்கை மடநல்லாய் நின்கண்டார்**
**உயிர்வாங்கும் என்பதை உணர்தியோ உணராயோ?” (அடிகள்: 23-25)**

எனும் பாடல் அடிகளில், “இளமையான அழகியே! உன் மார்பு கண்டவர்களின் உயிரை வாங்கி விடுகிறது. இதனை நீ உணர்வாயா? உணர மாட்டாயா?” என்று அவன் கூறும்போது அவனுள் காதல் பெருக்கெடுக்கிறது.

**“யாது ஒன்றும் வாய்வாளாது இறந்து ஈவாய் கேள்!” (அடி :29)**

எனும் பாடல் அடியில், “கேட்டவர்க்கு எதையும் வாய்திறந்து சொல்லாமல் போகின்றவளே,

கேள்'' என்று அவன் தொடர்ந்து கூறுகிறான். இவை எல்லாம் சொல் எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல் என்ற தொல்காப்பிய நூற்பாத் தொடரை நினைவூட்டுகின்றன.

> **“நீயும் தவறிலை, நின்னைப் புறங்கடைப்**
> **போதர விட்ட நுமரும் தவறு இலர்**
> **நிறைஅழி கொல் யானை நீர்க்கு விட்டாங் குப்**
> **‘பறை அறைந் தல்லது செல்லற்க” என்னா**
> **இறையே தவறு டையான்”**
>
> ***(அடிகள்: 30-34)***

எனும் பாடல் அடிகளில், ‘‘அழகால் பிறரைக் கவர்ந்து இழுக்கும் பெண்ணே ! நீ குற்றம் உடையவள் இல்லை. உன்னை இங்குச் செல்ல விட்ட உறவினரும் குற்றம் உடையவர் அல்லர். கொல்லும் இயல்புடைய யானையை நீர்நிலைக்கு அனுப்பும் போது பறைசாற்றி மக்களுக்குத் தெரிவிப்பது போல, நீ செல்லும் போதும் பறை முழக்காமல் செல்லக் கூடாது என்று உன்னைத் தடுத்து ஆணையிடாத அரசனே குற்றம் உடையவன்'''' என்கிறான் அந்த இளைஞன்.

இப்பாடலில் கைக்கிளை இலக்கணமாகிய பாதுகாவலற்ற (மருந்தற்ற) துன்பம் எய்தல், நன்மை தீமை இரண்டும் கூறித் தன்னை அவளோடு இணைத்துப் பார்த்துப் புலம்புதல், அவளுடைய பதில் பெறாமல் அவனே புலம்பி இன்புறல் ஆகியவை அமைந்திருப்பதைக் காணலாம்.

### அக இலக்கியங்களில் கைக்கிளை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற அன்பின் ஐந்திணைகளுக்கு உரிய மிகச் சில பாடல்களில் கைக்கிளையும் அமைந்திருப்பதைக் காணலாம். கைக்கிளைப் பாடல்களில் பெரும்பாலானவை ஆணின் ஒருதலைக் காதலைக் கூறும் ஆண்பாற் கைக்கிளைப் பாடல்களே ஆகும்.

### குறுந்தொகை

நக்கீரனார் பாடிய (பா.78) குறுந்தொகைப் பாடலில் பாங்கனின் கூற்றில் தலைவனின் ஒருதலைக் காதல் வெளிப்படுகின்றது. தனக்கு ஏற்பட்ட ஒருதலைக் காதலைத் தலைவன் தானே தனக்குள் சொல்லி மகிழும் மரபிலிருந்து சற்று மாறுபட்டுப் பாங்கன் தலைவனது ஒருதலைக் காமத்தைக் கண்டிக்கும் முறையில் கூறுவதாக அமைகிறது. தலைவன் பெண் ஒருத்தியை நினைந்து காம நோய்க்கு உட்பட்டு மெலிந்ததை அறிகிறான் பாங்கன். அறவுரை கூறித் தலைவனைத் தேற்றுகிறான்.

> **“நோதக் கன்றே காமம் யாவதும்**
> **நன்று என உணரார் மாட்டும்**
> **சென்றே நிற் கும் பெரும்பே தமைத்தே”**
>
> ***(குறுந், 78)***

‘தலைவனே! காமம் என்பது, சிறிது அளவேனும் நன்மை தருவது என்று அறியாத பேதையாரிடத்தும் சென்று ஒருவரை இரந்து நிற்கச் செய்யும் தன்மையை உடையது. ஆதலால் அது வெறுத்து ஒதுக்கத் தக்கது என்று உணர்வாயாக.'' இப்பாடல் கைக்கிளைக்கும் பொருந்துகிறது. தமிழ்க் காதல் என்ற நூலில் வ.சுப. மாணிக்கம் இப்பாடலைக் கைக்கிளைப் பாடலாகக் கருதலாம் என்று கூறுவது (ப.106) இங்குக் குறிக்கத்தக்கது.

### நற்றிணை

குறிஞ்சித் திணையில் மருதனிள நாகனார் பாடிய நற்றிணை 39ஆவது பாடலில் கைக்கிளை அமைந்துள்ளதாகக் கூறுவர்.

> **“சொல்லின் சொல் எதிர் கொள்ளாய்**
> **திருமுகம் இறைஞ்சி நாணுதி கதும் எனக்**
> **காமம் கைம் மிகின் தாங்குதல் எளிதோ”**
>
> ***(அடிகள் :1-3)***

எனும் பாடல் வரிகளில், ‘நான் உன்னை நாடிச் சில சொற்களைச் சொன்னால்,

நீ அவற்றை ஏற்கவில்லை; காமம் எல்லை தாண்டுமானால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமோ?'' என்றுதலைவன்தலைவியிடம் தன் காதலை எடுத்து உரைக்கின்றான். இங்குத் தலைவன் தானே பேசிப் புலம்புவது தெரிகிறது.

**சொல் எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்** என்று தொல்காப்பியர் கூறும் இலக்கணத்தை இப்பாடலின் முதல் அடி நினைவூட்டுகிறது.

### பெண்பாற் கைக்கிளை

தொல்காப்பியர் பெண்பாற் கைக்கிளை ஒழுக்கத்தைச் சொல்லவில்லை. இதற்குக் காரணம் சொல்வது போல் இளந்திரையனாரின் நற்றிணைப் பாடலில் ''தான் கொண்ட காதல் ஒழுக்கத்தைப் பெண் சொல்வது பொருந்து வதன்று'' என்று தலைவி ஒருத்தி கூறக் காணலாம்.

தோழியிடம் பேசுகிறாள் தலைவி.

**''யானே, பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கி''**
**(நற், 94 : 3)**

என்று தன் பெண்மைத் தன்மையால் தலைவனிடம் தன் காதலைக் கூற முடியாத நிலையிலிருப்பதைத் தெரிவிக்கிறாள். 'அவனிடம் காதல் கொண்டு, அவன் மார்பால் துன்புறும் என் நிலையை அறியாத இவன் என்ன ஆண் மகன்?'' எனத் தன் ஆற்றாமையைக் கூறுகிறாள். இது ஒருவகையில் பெண்பால் கைக்கிளையாகத் தோன்றுவதைப் புரிந்து கொள்ளலாம்.

### கலித்தொகை

கலித்தொகையின் 56, 57, 58 மற்றும் 109ஆம் பாடல்கள் கைக்கிளைப் பாடல்கள் ஆகும். 56 ஆவது பாடலில் கைக்கிளை அமைந்திருப்பதை இளம்பூரணர் உரையின் துணைகொண்டு முன்பே பார்த்தோம். கபிலர் பாடிய குறிஞ்சிப் பாடலாகிய 57ஆவது பாடலில், கொடி போலவும், மின்னல் போலவும், அணங்கு போலவும் தோன்றும் பெண் ஒருத்தி பந்தாடிக் கொண்டிருக்கிறாள். அவள் மீது கைக்கிளைக் காதல் கொண்ட தலைவன் அவளைப் பார்த்துப் பல சொற்களையும் சொல்கின்றான். அதற்கு ஒரு விடையும் சொல்லாமல் தலைவி நிலம் நோக்கித் தலை கவிழ்ந்து தன் வீட்டுக்குச் செல்கிறாள்.

''குளிர்ந்த மாலையை அணிந்த பாண்டியனின் பொதிகை மலையில் உள்ள வேங்கை மரத்தில் கொத்தாகத் தொங்கும் பூக்களைப்போன்ற தேமலை உடையவளே! முத்துமாலை அசையும் உனது மார்பகம் வலிமை மிக்கதும் மதம் சொரிவதுமான யானையை விடக்கோபம் உடையனவாக இருக்கின்றன. இது தக் கதா?(ப.424) என்று ச. வே. சுப்பிர்மணியன் விளக்கமளிக்கிறார். இவ்வாறு பல சொற்களைக் காம மிகுதியால் கூறுகிறான் தலைவன். அவள் பதில் கூறாமல், தலை கவிழ்ந்து தன் வீட்டுக்குச் சென்று விடுகிறாள். தன் அறிவை அவளிடம் இழந்துவிட்டு அரற்றுகிறான் தலைவன்.

இங்குத் தலைவியின் இளமை பற்றிக் கூறுவதனால் 'காமம் சாலா இளமையோள்'' என்னும் தொல்காப்பிய இலக்கணம் பாட்டில் அமைந்திருக்கக் காணலாம். தன் சொற்களுக்கெல்லாம் அவள் மறுமொழி தராமல் சென்றுவிட்டாள் என அவன் கூறுவது 'சொல் எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்'' என்னும் கைக்கிளை இலக்கணத்தை உணர்த்துகிறது. 'தன் அறிவைக்கவர்ந்து சென்று விட்டாள்'' என அவன் வருந்துவது, 'ஏமம் சாலா இடும்பை''யை (மருந்து இல்லாத நோயை) அவன் கொண்டிருப்பதை உணர்த்துகிறது. இவ்வாறு கைக்கிளைக் காதலின் அனைத்து இலக்கணங்களுக்கும் விளக்கம் போல இப்பாடல் அமைந்திருக்கின்றது. கபிலரே பாடிய, கலித்தொகையின் 58-ஆவது பாடலில் சிலம்பு ஒலிக்க, வளைக்கை வீசிக் கொண்டு நடந்து வரும் தலைவி தன் உயிரைக் கவர்ந்து

கொண்டு போவதாகவும், அச்செயலை அவளது இளமை காரணமாக அவள் அறிந்திருக்கவில்லை என்றும் தலைவன் புலம்புகிறான்.

**"உளனாஎன் உயிரைஉண்டு உயவு நோய் கைம்மிக
இளமை யான் உணராதாய்"**

***(அடிகள்: 7-8)***

என அவளிடம் பேசுகிறான். வேறு யாராலும் தீர்க்க முடியாத நோயை உண்டாக்குவது அவள் அழகு. அதனை அவள் வீட்டார் அறிவர். அறிந்தும் அதற்கு மேலும் அவளை அலங்காரம் செய்து, தம் செல்வச் செருக்கினால் வெளியே புறப்பட விட்டுவிட்டார்கள்; அவர்களே தவறுடையவர்கள் எனப் புலம்புகிறான் தலைவன்.

**"களைநர் இல் நோய் செய்யும் கவினறிந்து அணிந்து தம்
வளமை யால் போத்தந்த நுமர்தவறு"**

***(அடிகள்: 9-10)***

கைக்கிளைக் காதலின் உச்ச நிலையில், "என் நோய் பொறுக்கும் எல்லையைத் தாண்டி விட்டால் மடல் ஏறி உனக்கு ஒரு பழியை ஏற்படுத்தி விடுவேன் போல் இருக்கிறதே என்றும் தலைவன் புலம்புகிறான். இப்பாடலிலும் தலைவன் தலைவியின் மறுமொழி பெறாமல் தானே பேசுகிறான்; அவள் காமத்திற்கு உரிய பருவம் வராத இளமையுடையாள் என்பதைக் கூறுகிறான்; தனக்கு ஏற்பட்டுள்ள காமநோய் வேறு யாராலும் தீர்க்க முடியாதது என்பதை உணர்த்துகிறான். மேலும் தன்னைத் துன்புறுத்தும் தீங்கை அவள் மற்றும் அவளது உறவினர் பக்கமாகவும், தான் மடல் ஏறி உயிர் கொடுக்க இருக்கும் நன்மையைத் தன் பக்கமாகவும் சேர்த்துச் சொல்கிறான். இவை அனைத்தும் தொல்காப்பிய நூற்பாவில் சொல்லப்பட்ட கைக்கிளை இலக்கணத்துக்குப் பொருந்துமாறு அமைந்திருப்பதை நீங்கள் ஒப்பிட்டுக் கண்டுகொள்ளலாம்.

கலித்தொகையில் தலைவன் கூற்றாக வரும் 109 ஆவது பாடலில்,

**"இவள் தான், வருந்த நோய் செய்து
இறப்பின் அல்லால், மருந்து அல்லள்
'யார்க்கும் அணங்காதல் சான்றாள்"**

என்று, ஊர்ப் பெண்டிர்,

**'மாங்காய் நறுங் காடி கூட்டுவேம்; யாங்கும்
எழு நின் கிளையொடு போக" என்று தத்தம்
கொழுநரைப் போகாமல் காத்து, முழு நாளும்,
வாயில் அடைப்ப, வரும்"**

***(அடிகள்; 20-26)***

எனும் பாடல் அடிகளில் இவள் பிறரை வருத்திக்காமநோய்உண்டாக்கவேவருகிறாள். காம நோய்க்கு மருந்து ஆகமாட்டாள். தன் சால்பினால் எல்லாரையும் வருத்துபவள். ஊரிலுள்ள பெண்கள் எல்லாரும் "நான் மோர்-மாங்காய் தின்னவேண்டும் (கருவுற்றிருக்கிறேன்) எங்குச் சென்றாலும் உன் சுற்றத்தாரோடு செல்க. (தனியே செல்ல வேண்டாம்)" என்று தம் தம் கணவரை வீட்டின் வாயிலை அடைத்துக்காப்பாற்றிக்கொள்ளும்படி வருகிறாள் என்று கூறுவதை அறியமுடிகிறது. பெண்பாற் கைக்கிளை பரிபாடலிலும் புறநானூற்றிலும் பெண்பாற் கைக்கிளை அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

### பரிபாடல்

நல்லந்துவனார் பாடிய பரிபாடலில், தலைவி தோழியுடன் வையை ஆற்றில் நீராடுகிறாள்.

**"இன்ன பண்பின் நின் தைந்நீராடல்
மின்னிழை நறுநுதல் மகள் மேம்பட்ட
கன்னிமை கனியாக் கைக்கிளைக் காமம்"**

***(பரிபாடல், 11 : 134-136)***

என்று தோழி கூறும் அடிகள் தலைவியின் கைக்கிளைக் காமத்தைக் காட்டுகின்றன.

தலைவி வையை ஆற்றில் தைநீராடக் காரணம் அவளது கைக்கிளைக் காமம் என்கிறாள் தோழி. விரைவில் தலைவன்

ஒருவனை மணம்பெற வேண்டி நிற்கும் நிலை இங்குக் கைக்கிளைக் காமம் ஆகிறது.

எழுதிணையாகப் போற்றப்படும் அகப்பாடலுள் கைக்கிளை பெருந்திணைக்குரிய பாடல்கள் கலித்தொகையில் மட்டும்தான் காணப்படுகின்றன. மற்ற தொகை நூல்களில் இல்லை. புறத்தொழுக்கம் பற்றி கூறும் அகப்பாடல்கள் ஏன் கைக்கிளை பெருந்திணையைப் போற்றவில்லை. (சரளா ராஜகோபாலன்;1998) என்பது சிந்திக்கவேண்டியதாக உள்ளது.

### புறநானூற்றில் கைக்கிளை

புறநானூற்றில் மூன்று பாடல்கள் (83, 84, 85) கைக்கிளைத் திணையில், பழிச்சுதல் (பாராட்டுதல்) துறையில் அமைந்த பெண்பாற் கைக்கிளைப் பாடல்கள் ஆகின்றன. இம்மூன்று பாடல்களும் சோழன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளி மீது ஒருதலைக் காதல் கொண்டு பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் என்ற பெண்பாற் புலவர் பாடியவை. கோப்பெரு நற்கிள்ளி தன் தந்தையாகிய சோழன் தித்தனைப் பகைத்து நாடு துறந்து வறுமையுற்று அலைந்தவன். எனினும் சிறந்த வீரனாகத் திகழ்ந்தான். அவன் மீது நக்கண்ணையார் காதல் கொண்டார். அவர் பாடிய பாடல்களில் பாடப்பட்டவன் கற்பனைத் தலைவனாக அல்லாமல் உண்மைத் தலைவனாக அமைந்தமையால் இப்பாடல்கள் புறநானூற்றில் சேர்க்கப்பட்டன.

"கோப்பெரு நற்கிள்ளி மீது கொண்ட காதலால் என் கைவளைகள் கழன்று விழுகின்றன. காரணம் என்னவென்று என் தாய் கேட்பாளே! அவளுக்கு நான் அஞ்சுகிறேன். அவனது வீரத்தோளைத் தழுவ நினைக்கிறேன். ஆனால் பலரும் அவனைச் சூழ்ந்துள்ளனர்; அந்த அவையில் உள்ளவரை எண்ணி நாணுகிறேன். இந்த ஊர் தாயைப் போலவும், அவையைப் போலவும் இரு தன்மை உடையதாக இருக்கிறது. எனவே மயக்கத்தை உடைய இந்த ஊர் என்னைப் போலவே நடுக்கத்தை அடையட்டும் என்கிறார். (புறநானூறு - 83) இப்பாடலில் தலைவியின் காதலைத் தலைவன் அறியவில்லை என்பதை உணர்கிறோம். ஆகவே இது கைக்கிளையாகிறது.

### பிற இலக்கியங்களில் கைக்கிளை

திருக்குறள், நாயன்மார் பாடல்கள், ஆழ்வார் பாடல்கள், முத்தொள்ளாயிரம், சில சிற்றிலக்கியங்கள் ஆகியவற்றில் ஒருதலைக் காதல் மரபைக் காண முடிகின்றது.

### திருக்குறள்

**"அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"**
**(குறள் - 1081)**

எனத் 'தகையணங்குறுத்தல்" அதிகாரத்தில் ஆண்பாற் கைக்கிளையைக் காண முடிகின்றது. இவள் தெய்வப் பெண்ணோ? அழகு மயிலோ? கனமான குழையை அணிந்து உள்ளதால் மானிடப் பெண்ணோ? என்று என் உள்ளம் மயங்குகிறது என்று தலைவன் தன் ஒருதலைக் காதலை உணர்த்துகிறான்.

**"இரு நோக்கு இவள் உண்கண் உள்ளது ஒரு நோக்கு**
**நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து"**
**(குறள் -1091)**

எனக் குறிப்பறிதல்" அதிகாரத்திலும். இவளுடைய மை தீட்டிய கண்களில் உள்ளது இரு வகைப்பட்ட நோக்கமாகும்; அவற்றுள் ஒரு நோக்கம் நோய் செய்யும் நோக்கம்; மற்றொன்று அந்நோய்க்கு மருந்தாகும்(ப.224) என்றும் தலைவன் தன் கைக்கிளைக் காதலை உணர்த்துகிறான்.

### பக்தி இலக்கியத்தில் கைக்கிளை

அன்பினால் இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மா, தன்னைப் பெண்ணாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு அன்பு செலுத்தும். இந்நிலையை நாயக-நாயகி பாவம் என்பர். சைவ சமய அடியார்களாகிய நாயன்மார்களும், வைணவ சமய அடியார்களாகிய ஆழ்வார்களும்

இறைவனைத் தலைவனாக்கி, தம்மைத் தலைவியராய் ஆக்கி நாயக-நாயகி பாவத்தில் பல பாடல்களைப் புனைந்துள்ளனர்.

தேவாரத்தில் திருநாவுக்கரசர் தன்னைப் பெண்ணாக்கி சிவனை நினைந்து பாடும் முன்னை அவனிருக்கும் நாமம் கேட்டாள் மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள் என்னும் பாடல் கைக்கிளைக் கூற்றினதே. நாலாயிரத்திவ்யப்பிரபந்தத்தில் ஆண்டாளின் பாடல்கள் கைக்கிளைத் திறத்தனவே காமஞ்சாலா தலைவன் மீது காதல்கொண்டு ஏமஞ்சாலா இடும்பை எய்திய தலைவி கூற்றே நாச்சியார் திருமொழி. சொல்லெதிர்பெறாஅள் சொல்லி இன்புறல் அங்கு நிறைந்து காணப்படுகிறது.

தலைவியின் ஒருதலைக் காதலான பக்தியைத் தாய் கூறுவது போல நாவுக்கரசர் பாடியுள்ளார். தலைவனுடைய பெயரையும், நிலையையும், ஊரையும் கேட்டு, அதைச்சொல்லிச் சொல்லி, அவன் மேல் பித்தாகிறாள் தலைவி. தாய்-தந்தை சமூகக் கட்டுப்பாடு எல்லாவற்றையும் விடுத்துத் தன்னை மறந்து, தன் பெயரையும் மறந்து, இறைவன் திருவடியே தஞ்சமெனக் கிடக்கிறாள் அவள். இதனை,

**"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பேர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை**
**தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்**
**தலை ப் பட்டாள் நங்கை தலைவன் தாளே!"**
**(நாவுக்கரசர் தேவாரம், 6 : 25-7)**

என்னும் தேவாரப்பாடல், ஆறாம் திருமுறையில் திருவாரூர் திருத்தாண்டகத்தில் உள்ளது.(ப.301) இப்பாடலில், முதலில் சிவபெருமான் என்று அவன் பெயரைக் கேட்டு, அவனுடைய பொன்வண்ணத்தைக் கேட்டு, அவனுடைய திருவாரூரைக் கேட்டு மீண்டும் அவன் திறத்து நீங்காத காதல் உடையவளாயினாள். தாயையும் தந்தையையும் அன்றே மனத்தால் துறந்தாள். உலகவர்கூறும் 'கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை" என்ற நெறிமுறையை விடுத்தாள். தலைவனையே நினையும் நினைவிலே தான்செய்யும் செயல்களை அறியாது ஒழிந்தாள். கன்னி எனப்படும் தன் பெயர் நீங்கப் பெற்று அவன் உரிமை என்ற பெயரைக் கொண்டாள். அந்நங்கை அத்தலைவன் திருவடிகளை அணைந்து தனக்கென ஒன்றின்றி அவன் வழியளாய் ஒழிந்தாள் என்று பெண்பாற் கைக்கிளையைக் கூறுவதாக அமைகிறது.

### முத்தொள்ளாயிரம்

பிற்காலத்தில் தோன்றிய கோவை, உலா, தூது, கலம்பகம், குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்கள் கைக்கிளைக் காதல் அமைந்த இலக்கியங்கள் ஆகும். தெய்வம் அல்லது அரசன் மீது ஒரு பெண் கொண்ட காதலை இந்த இலக்கியங்கள் காட்டுகின்றன. முத்தொள்ளாயிரம் என்ற பிற்கால இலக்கியம் கைக்கிளைத் திணையின் வளர்ச்சி நிலைக்கு நல்ல சான்றாகும். சேர, சோழ, பாண்டிய மன்னர் மீது பெண்கள் கொள்ளும் ஒருதலைக் காதலை இந்நூல் முழுதும் காண முடிகிறது.

ஒரு பெண் உலா வரும் சேர மன்னன் கோதையைக் காணச் செல்கிறாள்; கதவைத் திறக்கிறாள்; நாணம் வந்ததால் வீட்டினுள் செல்கிறாள்; மீண்டும் கதவருகே செல்கிறாள்; நாணத்தால் வீட்டினுள் திரும்புகிறாள். பெரும் பணக்காரர் இல்லத்தில் சென்று நிற்கத் தயங்கும் ஏழை போல் அவள் நெஞ்சு போவதும் வருவதுமாகத் தடுமாறுகிறது.

**"ஆய்மணிப் பைம்பூண் அலங்கு தார்க் கோதையைக்**
**காணிய சென்று கதவு அடைத்(ந்)தேன் - நாணிப்**
**பெருஞ் செல்வர் இல்லத்து நல் கூர்ந்தார் போல**
**வரும் செல்லும் பேரும்என் நெஞ்சு"**
**(முத்தொள்ளாயிரம், பா.123)**

முத்தொள்ளாயிரம் பெண்பாற் கைக்கிளைப் பாடல்களில் காட்சி, ஐயம், தெளிவு, போன்ற கைக்கிளை நிகழ்வுகள். அடிக்கின் ஆழ்கடல் வண்ணன் எனத் தொடங்கும் 105 ஆவது பாடலிலும், இந்திரன் என்னின் இரண்டே கண் என்று தொடங்கும் 130ஆவது பாடலிலும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். காட்சி, ஐயம், தெளிவு போன்ற நிகழ்வுகள் ஆண்பாற் கைக்கிளைக்கு உரியன போல் இலக்கண நூல்கள் கூறுகின்றன. ஆனால் இவை முத்தொள்ளாயிரக் கைக்கிளைத் தலைவியரிடத்து நிகழ்வனவாகக் காட்டப்படுதல் ஒரு புதிய நெறியாக உள்ளது. (ப.140) என்று மணிவேல் கூறுகிறார்.

### பிற சிற்றிலக்கியங்களில் கைக்கிளை

கைக்கிளை தனிவகைச் சிற்றிலக்கியமாய்ச் சிறப்புறவில்லை எனலாம். ஆனால் கைக்கிளை பிற சிற்றிலக்கியங்களில் ஒரு பகுதியாய், உறுப்பாய் இடம்பெறுதலையும் கைக்கிளைக்கூறு வேறுவடிவம் தாங்கித் தனிச் சிற்றிலக்கியமாய் வளர்ந்து நிற்பதையும் காணமுடிகிறது.

அவ்வகையில் குறவஞ்சியில் ஒரு பகுதியாய் அமையும் கைக்கிளை, கலம்பகத்தில் ஓர் உறுப்பாய் அமைகிறது எனலாம். கலம்பகமாலை, பன்மணிமாலை ஆகிய சிற்றிலக்கியங்களிலும் கைக்கிளை ஓர் உறுப்பாக அமைகிறது. உலா, தூது போன்ற சிற்றிலக்கியங்களில் கைக்கிளை பெருமளவு இடத்தினைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறது எனலாம்.

### கலம்பகத்தில் கைக்கிளை

கலம்பகத்தின் உறுப்புக்களாக உள்ள பதினெட்டில் பதினான்காவது உறுப்பாக கைக்கிளை உள்ளது. அவற்றுள் கைக்கிளையும் ஒன்றாகும். உதாரணமாக கச்சிக்கலம்பகத்தில் இடம்பெறும் கைக்கிளை உறுப்புச் செய்யுளைக் காணலாம்.

**“பொங்கும் அருணயனப் பூவின் இதழ்குவியும்
இங்கு மலர்க்கோதை இதழ்வாடு - மங்குறவழ்
மாடக் கச்சியில் வாழுமெம் பெருமான்
குறையா வளக்கழுக் குன்றில்
உறைவா ளிவள்பூ வுதித்ததூ யவளே”**

**(செ. 24)**

கச்சிக்கலம்பகம் கலம்பகத்தின் உறுப்புகள் இரண்டு குறைவுபடப் பாடப்படும் கலம்பகமாலை எனும் சிற்றிலக்கியத்திலும் மூன்று குறைவுபடப் பாடப்படும் பன்மணிமாலை என்னும் சிற்றிலக்கியத்திலும் கைக்கிளை தவறாது இடம்பெறுகிறது.

### தஞ்சைவாணன் கோவையில் கைக்கிளை

அகப்பொருள் துறைகளுக்குரிய எடுத்துக்காட்டுப் பாடல்களைக் கோர்த்தமையும் கோவை என்னும் சிற்றிலக்கிய வகையுள்ளும் கைக்கிளைப் பாடல்கள் அமைகின்றன.

சான்றாய், தஞ்சைவாணன் கோவையில் அமையும் காட்சி, ஐயம், துணிவு, தெளிதல் என்னும் நால்வகை கைக்கிளைநிலைகளும் இடம்பெறும் புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன் எனத் தொடங்கும் முதல் பாடல் ஆகும். காட்சி என்பது தலைவன் தலைவியை முதன்முதலில் காணுவது. அப்போது அவன் அவள் அழகில் மயங்கித் தன் மனத்துக்குள் பேசுகிறான். காட்சிக்கு அடுத்தது ஐயம். அதாவது தலைவியைப் பார்த்த தலைவன் “இவ்வளவு அழகாக இருக்கிறாளே! இவள் தெய்வப்பெண்ணா? மானிடப் பெண்தானா? என்று ஐயம் கொள்கிறான். பின் அவளது தோற்றத்தையும் இயக்கத்தையும் கொண்டு அவள் மானிடப் பெண்தான் என ஐயம் தீர்கிறான். இது தெளிவு எனப்படும். அதன்பின் அவளது பார்வையில் அவனை விரும்பும் குறிப்பு இருப்பதைக் கண்டு மகிழ்கிறான். இது குறிப்பறிதல் எனப்படும். இந்நிலையில் காதல் ஒருபுறக் காதலாக இல்லாமல் இருபுறக் காதலாக மலர்கிறது. இவ்வாறு தொடங்கித் தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் களவுக் காதல் வாழ்க்கையில் மகிழ்வர்.

தலைவியின் கண் உடன்பாடு காட்டிவிட்டது எனில் நம்பியகப்பொருள் கூற்றின்படி இது கைக்கிளை. தொல்காப்பியர் கூற்றின்படி இது களவுக்காதல்.

**உலாவில் கைக்கிளை**

உலாவில் எழுபருவப்பெண்ணும் உலாவரும் பாட்டுடைத்தலைவனைக் கொண்டு காதல் கொள்வதாய் அமைக்கப்படுகிறது. பாட்டுடைத்தலைவனின் குறிப்பினை அறிய முயலும் அவனைத் தன்வயப்படுத்த முயலும் தலைவியரின் ஒருதலைக்காதலை விதந்தோதுகிறது இச்சிற்றிலக்கியம். மடந்தை, பேரிளம்பெண் ஆகியோரின் ஒருதலைக் காதலை பெருந்திணையின்பாற்படும் எனச் சிலரும் பெண் கொள்ளும் காதலாதலால் உலாக்காதல் முழுவதும் பெருந்திணையின் பாற்படும் எனச் சிலரும் உரைப்பர்.

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் கைக்கிளை**

குறவஞ்சி இலக்கியத்தின் முதல் பகுதியாக அமையும் தலைவன் உலா வருதல், தலைவி அவனைக்கண்டு காதல் கொள்ளுதல் ஆகியன கைக்கிளைப் பாங்கின. இங்கும் ஐயம், தெளிதல் ஆகிய கைக்கிளைக்கூறுகள் அரங்கேறுகின்றன. திருக்குற்றாலக் குறவஞ்சியில் தோழியருடன் பந்தடித்துக்கொண்டிருக்கும் வசந்தவல்லி, உலா வரும் ஈசனைக் கண்டு ஐயுற்றுத் தெளிந்து காதல் கொள்ளும் 14 ஆவது கைக்கிளைப் பாட்டினைச் சான்றாக காட்டலாம்.

> **“வானவர் திருக்குற் றாலர்**
> **மையலால் வசந்த வல்லி**
> **தானுடல் சோர்ந்தாள் என்று”**
>
> *(பா.14;1-3)*

என்ற பாடல் அடிகளில், வானவரான திருக்குற்றாள நாதரின் மீது கொண்ட மையலினாலேயே வசந்தவல்லியானவள் தன்னுடல் சோர்ந்து வீழ்ந்தனள் என்பதை அப்பாங்கியர் முடிவிலே அறிந்தனர்(ப.54) என்று புலியூர் கேசிகன் விளக்கமளிக்கிறார்.

**தூதில் கைக்கிளை**

தூது அகத்தூது, புறத்தூது என இருவகைப்படும். இவற்றில், அகத்தூது ஒருதலைக் காதலை எடுத்துரைத்து மாலை வாங்கிவரச் சொல்லும் கைக்கிளைத்தூது, களவிடைப்பிரிந்த காதலரைத்தன்நினைவூட்டி வரைவுகடாவ அழைத்துவரச்செய்யும் களவுத்தூது, கற்புக்காலத்தே பொருள்வயிற் பிரிந்த தலைமகனைத் தன்நினைவூட்டி அழைத்துவரச்செய்யும் கற்புத்தூது என மூவகைப்படும்.

காமமிக்க கழிபடர்கிளவி பெருந்திணைக்குரியது என தூதினைப் பெருந்திணைக்கண் சேர்க்க முயல்வர். ஆனால் தனது ஒருதலைக் காதலை எண்ணி வாடும் தலைவன்/தலைவி எங்கனமேனும் தலைவியிடம்/தலைவனிடம் எடுத்துச்செல்ல முனைந்து அதற்கெனத் தூதினை நாடி தன் தலைவியின்/தலைவனின் ஒப்புதலைப் பெற முனைதல் கைக்கிளைப்பாங்கினது எனக்கொள்ளலே தகும். அவ்வகையில் தமிழ்விடுதூது, அழகர் கிள்ளைவிடுதூது முதலியன கைக்கிளைத்தூது என வகைப்படுத்தலாம்.

**முடிவுரை**

ஆணோ, பெண்ணோ தாமே கொள்ளும் காதலைக் கைக்கிளை என்பர். கைக்கிளை ஒருதலைக்காமம் என்று நம்பி அகப்பொருள் விளக்குகிறது. தொல்காப்பியர் காலத்தில் காமப் பருவம் அடையாத பெண்ணைப் பருவம் அடைந்தவளாகக் கருதிக் காதல் கொள்வது கைக்கிளை எனப்பட்டது. கைக்கிளை என்பது ஆண்மகனுக்குரியது என்றும் கூறப்பட்டது. காமப்பருவம் எய்தாத ஆணிடம் பெண் காதல் கொள்வது கூறப்படவில்லை. ஆனாலும் பருவம் அடைந்த ஆணைப் பெண் ஒருதலையாக விரும்புதல் புறமாகக் கொள்ளப்பட்டது. நக்கண்ணையார், ஆமூர்மல்லனைப் பற்றிப் பாடிய கைக்கிளைப் பாடல் புறநானூற்றில் (83, 84, 85) தொகுக்கப்பட்டுள்ளது என்பது இதற்குச் சான்று எனலாம். ஆண்பால் கைக்கிளைப் பாடல்கள் கலித்தொகையில் (56, 57, 58, 109)

இடம்பெறுகின்றன. முத்தொள்ளாயிரத்தில் அகப்பாடல்கள் எல்லாமே ஒருதலைக் காதலைக் கூறும் கைக்கிளைப் பாடல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கலம்பகத்தின் உறுப்பாகவும் கைக்கிளை உள்ளது. நம்பியகப்பொருள் அகத்திணையாகவும் அகப்புறத்திணையாகவும் கைக்கிளையைக் கொள்கிறது. காதலின் தொடக்க நிலையை அது அகக் கைக்கிளை என்கிறது. காமப்பருவம் அடையாத பெண்ணிடம் காதலைப் புலப்படுத்துதலை அகப்புறக்கைக்கிளை என்கிறது. புறப்பொருள் வெண்பா மாலை பருவமடைந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் ஒருதலைக் காதலைக் கைக்கிளைத் திணையாகக் கொள்கிறது. பெரும்பாலும் போர்த்திணைகள் பற்றிப் பேசும் புறப்பொருள் வெண்பா மாலை ஒருதலைக் காதலையும் அகச்சிறப்பற்றதாகக் கருதிப் புறத்தில் சேர்த்திருக்கிறது. இதில் காணும் துறைக்கொளுக்களும் வெண்பாக்களும் காதலைச் சுவைபடக் கூறுகின்றன.

தொல்காப்பியருக்கும் பிற்கால இலக்கண ஆசிரியர்களுக்கும் கைக்கிளை குறித்து கருத்து வேறுபாடுகள் உள்ளன. பிற்கால இலக்கண ஆசிரியர்களின் கருத்தினை ஒட்டியே கைக்கிளைப்பாடல்கள் புறநானூற்றில் இடம்பெறுகின்றன. கைக்கிளை குறிப்பு என்னும் குறுநிலையோடு ஒதுக்கப்படாமல், சிற்றிலக்கியங்களின் உறுப்புக்களாகவும் பகுதியாகவும் சிற்றிலக்கிய வகையாகவும் வளர்ந்து நிற்கிறது எனலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. தேவிரா (உரை). 2020. புறப்பொருள் வெண்பாமாலை. சென்னை, ஸ்ரீநந்தினி வெளியீடு.
2. கோபாலியர், டி.வி. (ஆசிரியர்), 1974. இலக்கண விளக்கம், தஞ்சாவூர், சரஸ்வதி மகால் வெளியீடு.
3. கோவிந்தராச முதலியார், கா. ஆர். (விரிவுரை), 1978. பன்னிரு பாட்டியல், சென்னை, கழக வெளியீடு.
4. கண்ணன், ஆர். (பதிப்பு), 2003. மரநாகப்பொருள். சென்னை, கூத்தன் வெளியீடு.
5. கண்ணன், ஆர். (உரை), 2005. வெண்பாபாட்டியல். சென்னை, அப்பர் பப்ளிகேஷன்.
6. மணிகனார், வா.சுப. 2009. தமிழ்க்கடல், சென்னை, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்.
7. மணிவேல், முனைவர் மு. 2009, தமிழ் இலக்கிய அகப்பொருள் மரபுகள், மதுரை, செல்லப்பா வெளியீடு.
8. முத்துக்குமாரசுவாமி தம்பிரான். 1992, திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். திருப்பனந்தாள், ஸ்ரீகாசிமடம்.
9. முத்துவீர உபாத்யாயா. 1889. முத்துவீரம், சென்னை, ஆல்பியன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
10. நாராயணசாமி ஐயர், ஏ. (உரை), 1962. நற்றிணை, சென்னை, கழக வெளியீடு.